**செய்தி வெளியீடு எண்: 549** **நாள்:24.11.2016**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்துறை இணை இயக்குநர்கள் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

**–*–*–**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் ஆணைக்கிணங்க, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்துறை இணை இயக்குநர்கள் ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் தலைமையில் 24.11.2016 அன்று டி.எம்.எஸ் வளாக கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., மாநில நலவாழ்வு சங்க குழும இயக்குநர் டாக்டர் தரேஸ் அகமது இ.ஆ.ப. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் டாக்டர் கே. செங்குட்டுவன் மற்றும் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் தொலைநோக்குப் பார்வையோடும் சீரிய தலைமையின் கீழ் இயங்கி வரும் மக்கள் நல்வாழ்வுத் துறை பல்வேறு தரப்பட்ட மக்கள் பயன்பெறும் வகையில் புரட்சிகரமான பல முன்னோடி திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தி அனைத்து தரப்பினரின் பாராட்டுதலை தொடர்ந்து பெற்று வருகிறது. மேலும், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து உலகத் தரம் வாய்ந்த சிகிச்சை அளிக்கும் வகையில் சுகாதார கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் மருத்துவ மனித வளத்தை பெருக்குதல் ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

இக்கூட்டத்தில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், தாய்மார்கள் மற்றும் குழந்தை இறப்பு விகிதங்களை குறைக்க உதவும் சீமாங் மையங்கள், பழங்குடியினருக்கான மருத்துவ சேவைகள், மது போதை மாற்று மறுவாழ்வு மையங்கள் மற்றும் மாவட்ட மன நலத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இரண்டாம் நிலை மருத்துவ சேவை (Secondary Care) வழங்குவதில் 93ஆண்டு வரலாறு கொண்ட மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தின் கீழ் செயல்படும் மருத்துவமனைகள் பலதரப்பட்ட மக்களின் சிறப்பு மருத்துவ சேவைகளை பூர்த்தி செய்யும் முகமாக வெகுச்சிறப்பாக செயல்பட மாண்புமிகு அமைச்சர் அறிவுறுத்தினார்.

மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் இயங்கி வரும் தகுதியற்ற போலி மருத்துவர்களை கண்டறிந்து அவர்களை ஒடுக்கும் நடவடிக்கை தற்போது காலத்தின் கட்டயாமாகும். எனவே, ஒவ்வொரு இணை இயக்குநரும் காவல் துறையுடன் இணைந்து போலி மருத்துவர்களை கண்டறிந்து அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க மிகுந்த முனைப்புடன் செயல்படவும் மாண்புமிகு அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

–*–*–

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**